*** 261. வினா—திரு. இ. ராமசாமி :** மாண்புமிகு தொழிலாளர் நலன்–போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தோட்டத் தொழில் அனைத்துக்கும் குறைந்தபட்சக் கூலி நிர்ணயச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட குழு அண்மையில் மாற்றியமைக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) 1975 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மேற்படி தோட்டத் தொழிலாளர்களுக்கான குழு மாற்றியமைக்கப்பட்டது.

(இ) தொழிலதிபர்களுக்கும், தொழிலாளர் பிரதிநிதி களுக்கும் சரிசமமான பிரதிநிதித்துவத்தை அளிக்கவும் மேலும் மேற்படி பிரதிநிதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் 1974-ம் ஆண்டு அமைக்கப்பட்ட குழு 1975-ம் ஆண்டில் மாற்றியமைக்கப் பட்டது.

* 262. *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour and Transport be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to set up Advisory Committees to recommend minimum wages for workers engaged in building constructions, road building and repairs, quarries, hotels and restaurants; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) கட்டடங்கள், கட்டுமானப் பணிகள், சாலை அமைத்தல், பழுது பார்த்தல், கல் வெட்டி எடுத்தல், உணவகங்கள், சிற்றுண்டிச் சாலைகள் ஆகிய வற்றில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப் பட்டு செயல்பட்டு வருகின்றன. அவற்றின் அறிக்கை இன்னும் அரசுக்கு வரவில்லை.

*** 263. வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழி லாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1975 நவம்பர் 10]

உப்பளங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: உப்பளங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு 1968-ஆம் ஆண்டு, குறைந்த பட்ச **ஊதியம்** (Minimum Wges) நிர்ணயிக்கப்பட்டது. இதனை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

*264 வினா—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அச்சகத் தொழிலாளர்க்கும் திரை அரங்குகளில் பணியாற்றும் தொழிலாளர்க்கும் குறைந்த அளவு ஊதியம் நிர்ணயிக்கும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) அச்சகத் தொழிலாளர்க்கும் திரை அரங்குகளில் பணியாற்றும் தொழிலாளர்க்கும் குறைந்த அளவு ஊதியம் நிர்ணயிப்பதற்காக சென்ற ஆண்டு மார்ச் மாதத்தில் மேற்படித் தொழில்களை 1948-ம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் அட்டவணையில் சேர்த்து அரசாணை இடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் குறைந்த அளவு ஊதியம் நிர்ணயிப்பதற்காக ஒரு குழு அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, கீழத் தஞ்சை மாவட்டத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்குரிய கூலியினை நமது கழக அரசு இதற்கு முன்பே நிர்ணயித்திருக்கிறது. விவசாயத் தொழிலாளர் கூலி நிர்ணயம் சம்பந்தமாக கீழ்த் தஞ்சை மாவட்டத்திற்கு மட்டுமல்லாமல், தமிழகத்தில் உள்ள அத்தனை விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் பொருந்தும் அளவுக்கு நிர்ணயம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, எற்கனவே விவசாயிகளுக்கான ஒரு கூலி நிர்ணயக் குழு அமைக்